## திருநெல்வேலி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை

**(ஆகஸ்டு 29-ம் தேதி முதல் செப்டம்பர் 2-ம் தேதி வரை)**

**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (25.8.15- 27.8.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 37- 38 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 23- 26 |
| வானம் (ஆக்டா) | 2- 3 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 56- 61 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 40- 74 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 2 |
| காற்றின் திசை | 320 |

**2.9.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1 29.8.15 | நாள் 2 30.8.15 | நாள் 3 31.8.15 | நாள் 4 1.9.15 | நாள் 5 2.9.15 |
| மழை (மி.மீ.) | 0 | 0 | 4 | 0 | 3 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 36 | 36 | 36 | 36 | 36 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 26 | 25 | 25 | 26 | 26 |
| வானம் (ஆக்டா) | 5 | 4 | 5 | 7 | 7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 37- 69 | 39- 68 | 39- 66 | 37- 63 | 37- 63 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 13/ மேற்கு | 13/ மேற்கு | 11/ மேற்கு | 11/ மேற்கு | 9/ மேற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் மிதமான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர்/ சாகுபடி சூழல் | பருவம்/ சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| நெல் | பசுந்தாள் உரமிடல் | நெற்பயிருக்கு பசுந்தாள் உரமிடுவது உரத்தேவையை குறைக்கவும் மண்வளத்தை மேம்படுத்தவும் உதவும். வரும் செப்டம்பர் -அக்டோபர் பருவத்தில் சாகுபடி செய்யப்படும் நெற்பயிருக்கு ஊட்டச்சத்துக்களை அளிக்க பசுந்தாள் உரப்பயிரான தக்கைப்பூண்டினை 20 கிலோ/ எக்டர் என்ற அளவில் விதை அளவை பயன்படுத்தி விதைக்கவும். |

| | | |
|---|---|---|
| மிளகாய் | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | மிளகாயில் காய்ப்பிடித்தலை மேம்படுத்த என். ஏ. ஏ. (NAA) என்ற வளர்ச்சி ஊக்கியை 10 மில்லி கிராம்/ லிட்டர் என்ற அளவிலும் டிரையாகான்டனால் என்ற வளர்ச்சி ஊக்கியை 1.25 மில்லி கிராம்/ லிட்டர் என்ற அளவிலும் தெளிக்கவும். |
| தக்காளி | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் மிதமான மேகமூட்டம் மற்றும் ஈரப்பதம் கொண்ட வானிலையில் தக்காளில் காணப்படும் காய்த்துளைப்பானை கட்டுப்படுத்த இன்டோக்சாகார்ப் 14.5 % SC 8 மில்லி/ 10 லிட்டர் அல்லது பாசலோன் 35 % EC 13 மில்லி/ 10 லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| வாழை | குலை தள்ளும் பருவம் | குலைதள்ளும் பருவத்திலுள்ள வாழைக்கு மகசூலை மேம்படுத்த வளர்ச்சி ஊக்கி பிளான்டோசைன் 2 மில்லி/ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| சப்போட்டா | காய்க்கும் பருவம் | காய்க்கும் பருவத்திலுள்ள சப்போட்டா மரத்திற்கு தேவையான உரங்களை இடவும். 5 வயதுக்கு மேற்பட்ட மரத்திற்கு தொழுஉரம் 50 கிலோ, யூரியா 2.2 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 6.25 கிலோ மற்றும் பொட்டாஷ் 1.6 கிலோ என்ற அளவில் மரத்தின் அடிப்பகுதியிலிருந்து 45 செ.மீ. தள்ளி இடவும். |

குறுஞ்செய்தி-: மழை: ஆகஸ்டு 31& செப்டம்பர் 2ம் தேதிகளில்: 4& 3 மி.மீ. செப்டம்பர் -அக்டோபர் பருவத்தில் நெல் சாகுபடி செய்வதற்கு தக்கைப்பூண்டினை 20 கிலோ/எக்டர் என்ற அளவில் விதைக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி